## சேவைகள்:

- 3 மாதங்களுக்கு ஒருமுறை கேட்கும் திறன் மதிப்பிடப்படும்.
- ஒலி / பேச்சு பயிற்சி தனியாக (1:1) மற்றும் குழுவாகவும் தரப்படும்.
- தமிழக அரசின் இலவச காக்ளியர் இம்பிளான்ட் உபகரணங்கள் பெறுவதற்கான ஆலோசனை வழங்கப்படும்.
- காக்ளியர் இம்பிளான்ட் கருவியை பயன்படுத்தும் மற்றும் பராமரிக்கும் முறைகளை பற்றிய ஆலோசனைகள் தரப்படும்.
- மரபியல், உளவியல் துறைகளில் ஆலோசனைகள் தரப்படும்.
- சாதாரண பள்ளிகள் மற்றும் சிறப்பு பள்ளிகளில் சேர்வதற்கு வழிகாட்டப்படும்.
- காக்ளியர் இம்பிளான்ட் கருவியில் பழுது ஏற்பட்டால் பரிசோதனை செய்து அதற்கான தீர்வு வழங்கப்படும்.

.

## ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையத்தின் காக்ளியர் இம்பிளான்ட் திட்டம் (CLIPS)

ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவமனையில் 2006-ஆம் ஆண்டிலிருந்து காக்ளியர் இம்பிளான்ட் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. சுமார் 220 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யபபட்டுள்ளது. 2013-ம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு அரசு விரிவாக்க சுகாதார திட்டம் மூலம் 171 காக்ளியர் இம்பிளான்ட் அறுவை சிகிச்சை செய்து ஒலி / பேச்சு பயிற்சியினை வெற்றிகரமாக அளித்து வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி 20ஆம் தேதி CLIPS ஆண்டு விழா நடைபெறும்




**மேலும் விவரங்களுக்கு அணுகவும்**

பேச்சு, மொழி மற்றும் கேட்பியல் துறை

இரண்டாவது தளம், ஸ்ரீமதி கமலம் இராமசுவாமி வளாகம்

ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவமனை

போரூர், சென்னை - 600 116

தொலைபேசி எண் : 044-2476 5512

இணைப்பு எண் : 320

இணையதளம் : clinics.slhs@sriramachandra.edu.in


# ஸ்ரீ இராமச்சந்திரா

மருத்துவ மையம்

## காது, மூக்கு, தொண்டை மருத்துவத் துறை மற்றும் பேச்சு, மொழி மற்றும் கேட்பியல் துறை

"நீங்கள் காதுகேட்கும் திறனை இழந்துவிட்டால்
மாற்றத்திற்கு பயப்பட வேண்டாம்,
காக்ளியர் இம்பிளான்ட் மூலம்
கேட்கும் திறனை மீண்டும் பெறலாம்"



**தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடுதிட்டத்தின் கீழ் காக்ளியர் இம்பிளான்ட் சிகிச்சை பற்றிய கையேடு**



செவித்திறன் இழப்பை காக்லியர் இம்பியான்ட் அறுவை சிகிச்சை மற்றும் கேட்டல் பயிற்சியின் மூலம் மேம்படுத்தலாம்.

**(1) காக்ளியர் இம்பிளான்ட் என்றால் என்ன?**

காக்ளியர் இம்பிளான்ட் என்பது ஒரு சிறிய மின்னனு சாதனமாகும். இது அதிக செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு, காதுகேட்கும் கருவிகள் மூலம் பலன் அடையாதவர்களுக்கு, ஒலி உணர்வை வழங்க உதவுகிறது.

- வெளிப்புறசாதனம் (External Device) காதுக்கு பின்னால் வைக்கப்படும். உட்புறசாதனம் (Internal Device) காதுக்குள் அறுவைசிகிச்சை மூலம் பொருத்தப்படும்.
- இந்த கருவி காதிற்கு வெறிப்புறத்திலும் உட்புறத்திலும் பொருத்தப்படுகிறது.
- உட்புறசாதனம் காக்லியர் இம்பிளான்ட் அறுவை சிகிச்சையின் மூலம் பொருத்தப்படும்.
- வெறிப்புறசாதனம் செயலி பொருத்தப் படுகிறது.




**(2) தமிழ்நாடு அரசு முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் (TNCMCHIS) மூலம் காக்ளியர் அறுவை சிகிச்சை செய்வது எப்படி?**

செவித்திறன் குறைபாடான குழந்தைகளை கண்டறிந்து மருத்துவ பரிசோதனை செய்தபின் தேனாம்பேட்டையில் உள்ள மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்கத்தில் (DMS), ஒப்புதல் வாங்கியபிறகு அறுவை சிகச்சை செய்யப்படும். 3 வாரத்திற்கு பிறகு ஸ்விட்ச் ஆன் (switch on) செய்யப்படுகிறது. பிறகு ஒரு வருடகால ஒலி / பேச்சு பயிற்சி, வாரம் இரண்டு முறை என வழங்கப்படுகிறது.

**(3) தமிழ்நாடு அரசு முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டதின் அடிப்படைத் தகுதிகள் மற்றும் தேவையான ஆவணங்கள்**

**தமிழ்நாடு அரசு முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டம்** (TNCMCHIS) **கீழ் உள்ள காக்ளியர் இம்பிளான்ட் சிகிச்சை**

**(I) அடிப்படைத் தகுதிகள்**

- சிகிச்சைபெறும் குழந்தையின் வயது 1 முதல் 6 வயதுக்குள் இருக்கவேண்டும்.
- குழந்தைக்கு இரண்டு காதுகளிலும் கேட்கும் திறன் குறைபாடு 80% -90% இருக்க வேண்டும்.

**(ii) தேவையான ஆவணங்கள்:**

- குழந்தையின் பிறப்புச் சான்றிதழ்.
- ரேசன் கார்டு.
- தமிழ்நாடுஅரசின் மருத்துவக் காப்பீடுஅட்டை.

**(4) இந்த அறுவை சிகிச்சைக்கு யாரை அனுக வேண்டும்?**

- காது,மூக்கு,மற்றும் தொண்டை நிபுணர்
- கேட்பியல்,பேச்சு மற்றும் மொழிப்பயிற்சி நிபுணர்
- சிறப்புப் பயிற்சியாளர்

**(5) இந்த சிகிச்சையின் செயல்முறைகள் என்ன?**

- காது, மூக்கு, தொண்டை மருத்துவரின் பரிசோதனை.
- முழுமையான காது கேட்கும் திறன் பரிசோதனை.
- காக்ளியர் இம்பிளான்ட் பொருத்தும் அறுவைசிகிச்சை.
- காதில் வெளிப்புற செயலியை (processor) பொருத்துதல்.
- மேப்பிங் (Mapping) என்ற முறையின் மூலம் காக்ளியர் இம்பிளான்ட் கருவி இயக்கப்பட்டு காது கேட்கும் திறனை அதிகரித்தல்
- செவித்திறன் நிபுணரின் (Audiologist) மூலம் காதுகேட்கும் தன்மை கூர்மையாக்கப்பட்டு கண்காணிப்பார்.
- சிறப்பு பயிற்சியாளர் (Habilitationst) கேட்டு கவனிக்கும் திறனையும், பேச்சு திறனையும் அதிகரிக்க பயிற்சியளிப்பார்.
- பின்னர் தனிப்பட்டபயிற்சி (1:1) மற்றும் குழு பயிற்சி வழங்கப்படுகிறது.